சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிமன்றம், பல்லடம்.

**SC. No. 110/2022**

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | : | அ.சா. 2 |
| பெயர் மற்றும் வயது | : | பாலமுருகன் |
| கணவர் பெயர் | : | மலைச்சாமி |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | பல்லடம் |
| மாவட்டம் | : | திருப்பூர் மாவட்டம். |

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் புதன்கிழமை திரு.கே.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**எதிரிகள் ஆஜர். அரசு தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

1. நான் தற்போது அம்மாபாளையத்தில் குடியிருந்து உணவகம் நடத்தி வருகிறேன். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 5 மணயளவில் சாட்சி பாலகுருவை 5-6 நபர்கள் சுற்றி வளைத்து மிரட்டி கொண்டிருந்தார்கள். அது சம்மந்தமாக விசாரித்து காவல் துறையிடம் ஒப்படைத்தோம். வழக்கு எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் படிவம் 91ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள குறிப்பிட்ட வழக்கு சொத்துக்கள் குறித்து எனக்கு தெரியாது. **( படிவம் 91ல் உள்ள சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக அ.சா.2 மூலம் குறியீடு செய்யப்படுகிறது)** போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதித்ததன் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் கடந்த 06.07.2019ம் தேதி வடுகபாளையத்தில் மாலை 5 மணியளவில் எம்.எஸ்.எம் மளிகை கடை அருகே வந்த போது பதிவு எண் இல்லாத Tatson கார் நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது 1 மற்றும் 2 எதிரிகள் சாட்சி பாலகுருவிடம் உடுமலை செல்வதற்கு வழி கேட்டு அதன் பிறகு காரில் இருந்து 3 முதல் 6 எதிரிகள் உருட்டு

கட்டையுடன் வந்து அவரை மிரட்டி பணத்தை எடுடா என்றும் செயினை கழற்றி கொடுடா என்றும் கத்தி மற்றும் உருட்டு கட்டையால் மிரட்டி சட்டை பையில் வைத்திருந்த பணம் ரூ. 1450 மற்றும் கவரிங் செயினை பறித்து கொண்டதாகவும் அப்போது அவ்வழியாக வந்த எங்களை பார்த்து கிட்டே வந்தால் கொன்று விடுவதாக மிரட்டியதாக சாட்சி பாலகுரு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து அவர்களது விசாரணையில் வாக்குமூலம் கொடுத்துவிட்டு அதே போல் வழக்கு சொத்துக்களை காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம்

சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிமன்றம், பல்லடம்.

**SC. No. 110/2022**

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | : | அ.சா. 1 |
| பெயர் மற்றும் வயது | : | பாலகுரு |
| கணவர் பெயர் | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | பல்லடம் |
| மாவட்டம் | : | திருப்பூர் மாவட்டம். |

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் புதன்கிழமை திரு.கே.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**எதிரிகள் ஆஜர். அரசு தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

1. நான் தற்போது அம்மாபாளையத்தில் குடியிருந்து காவலாளியாக வேலை செய்து வருகிறேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு சொந்த வேலையாக காவல் நிலையம் சென்றிருந்த போது அவர்கள் கையொப்பம் போட்டு கொடுத்தேன். வழக்கு தொடர்பாக வேறு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் எழுதியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. **( மேற்படி புகாரில் உள்ள சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆக அ.சா.1 மூலம் குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு எதிரிகளை தெரியாது. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதித்ததன் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் கடந்த 06.07.2019ம் தேதி வடுகபாளையம் தனம் என்ற எனது அக்கா விட்டிற்கு சென்றுவிட்டு மாலை 5 மணியளவில் எம்.எஸ்.எம் மளிகை கடை அருகே வந்த போது பதிவு எண் இல்லாத Tatson கார் நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது 1 மற்றும் 2 எதிரிகள் என்னிடம் உடுமலை செல்வதற்கு வழி கேட்டு அதன் பிறகு காரில் இருந்து 3 முதல் 6 எதிரிகள் உருட்டு கட்டையுடன் வந்து என்னை மிரட்டி பணத்தை

எடுடா என்றும் செயினை கழுற்றி கொடுடா என்றும் கத்தி மற்றும் உருட்டு கட்டையால் மிரட்டி சட்டை பையில் வைத்திருந்த பணம் ரூ. 1450 மற்றும் கவரிங் செயினை பறித்து கொண்டதாகவும் அப்போது அவ்வழியாக வந்த மற்ற சாட்சிகளை பார்த்து கிட்டே வந்தால் கொன்று விடுவதாக மிரட்டியதாக நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து அவர்களது விசாரணையில் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம்